களைச் சொல்ல முடியும். ஏராளமாக லாபம் பெருகிறார்கள். ஆனால் பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட நேரத்தில் ரெஜிஸ்ட்ரார் சொல்ல முடியும். இவ்வளவு லாபம் வந்திருக்கிறது. ஷேர்ஹோல்டருக்கு இவ்வளவு டிவிடண்ட் பிரித்துக் கொடு என்று சொல்லமுடியும். இப்படி டைரக்ஷன்—அறிவுரை கொடுக்க வேண்டும் என்று சொல்வது எப்படி துஷ்பிரயோகம் ஆகும்? இதுவரையில் அறிவுரை சொல்லிக்கொண்டிருந்தார்கள். வெறும் அறிவுரை சொல்லிக்கொண்டிருந்தால் போதுமா? அதை அமுல் நடத்த வேண்டாமா? கான்சிக்வன்ஷியலாக வரவேண்டாமா? அதற்காகத்தானே, மகாராஷ்டிரா ஆக்டில் பப்ளிக் இன்ட்ரஸ்ட் என்று போடப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரா ஆக்டில்

"All the Registered Societies or the Registered Societies concerned, as the case may be, shall be bound to comply with such directions".

என்று இருக்கிறது. அதைச் சேர்த்துத்தானே போடவேண்டும்? வெறுமனே அறிவுரை வழங்குவதில் பலன் என்ன? எனவே, முழுமையாக இருப்பதற்கு அந்தப் பகுதியும் வேண்டும். எனவே. மசோதாவை சட்டமாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU J. JAMES: I am not pressing my amendment.

The amendment moved by Thiru J. James was, by leave, withdrawn.

Clause 7 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: : Sir, I move—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971), as amended, be passed into law".

The motion was put and carried and the Bill, as amended, was passed into law.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவை இந்தப் பேரவைக்குக் கொண்டு வருவதற்கு குடியரசுத் தலைவர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

1971-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவை வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.